ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1564/4 - 2008 අගෝස්තු 26 වැනි අඟහරුවාදා - 2008.08.26
*1564/4 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### செயலாளர்கள் பற்றிய பிரமாணக் குறிப்பு

*1979 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆந் திகதியும் 48/2 ஆம் இலக்கமும் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதையடுத்து, 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதியும் 1377/13 ஆம் இலக்கமும் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் திருத்தப்பட்ட செயலாளர்கள் பற்றிய பிரமாணக் குறிப்பை பின்வருமாறு மேலும் திருத்துவதற்கு அதியுத்தமராம் சனாதிபதி அவர்கள் பணித்துள்ளார் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*லலித் வீரதுங்க,*
*சனாதிபதியின் செயலாளர்.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு - 01,*
*2008, ஓகத்து 22.*

*1. செயலாளர்கள் பற்றிய பிரமாணக் குறிப்பின் 6 ஆம் உறுப்புரையை அடுத்து பின்வரும் உப உறுப்புரை இத்தால் சேர்க்கப்படுகின்றது :-*

*6 (அ) - அமைச்சுச் செயலாளர் ஒருவரை சேவையிலிருந்து நீக்குதல், ஒழுக்காற்றுகை ஆகியன குறித்த தத்துவங்கள் சனாதிபதிக்கு உரித்தாகும். சனாதிபதியின் செயலாளர் தொடர்பில்லாதவிடத்து, சனாதிபதியினால் சனாதிபதியின் செயலாளர் மூலம் குறித்த தத்துவங்கள் செயற்படுத்தப்படலாம்.*

*6 (ஆ) - யாதேனுமொரு செயலாளரினால் பிறழ்நடத்தையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதில் ஐயம் ஏற்படுமிடத்து அல்லது தகவல் கிடைக்குமிடத்து அன்றேல் அமைச்சர் ஒருவரால் குறித்த செயலாளர் தொடர்பாக சனாதிபதிக்கு பிறழ்நடத்தையொன்று குறித்து அறிவிக்கப்படுமிடத்து, அது தொடர்பாக ஆராய்ந்து சனாதிபதிக்கு அறிக்கையிடுவதற்காக சனாதிபதியின் செயலாளரினால் பொருத்தமான ஆளொருவர் அல்லது ஆட்களின் குழுவொன்று நியமிக்கப்படலாம். குறித்த குழு, தனது காண்புகளையும் விதப்புரைகளையும் தருகின்ற அறிக்கையை சனாதிபதியின் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், சனாதிபதியின் செயலாளரினால் அதன் பிரகாரம் அது தொடர்பில் உசித நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

*09 - 476*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.